DINAMANI

PAGE NO: 08    DATE: 25.03.2023

# முதுகலைப் படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, மார்ச் 24: புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பல்வேறு முதுகலைப் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள்ல் சேர இணையதள வழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பல்கலைக் கழகத் தரப்பில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய தேர்வு மையம் மூலம் பல்கலைக் கழகங்கள் முதுகலைப் படிப்புக்கு பொது நுழைவுத் தேர்வை நடத்தி வருகின்றன.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளில் சேர இணையவழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்காக பல்கலைக்கழக இணையதள முகவரி செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 2023-24 ஆம் கல்வி ஆண்டுக்கு முதுகலைப் பட்டம், பட்டயப் படிப்புகளில் சேர விரும்புவோர் சி.யு.இ.டி. பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பல்கலைக்கழக இணையதள முகவரியில் விண்ணப்பிப்பதற்கு முன் கல்வித் தகுதிகளின் தேவைகளை கவனமாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

மேலும், பல்கலைக்கழக வலைத்தள தகவல் கையேட்டிலுள்ள தேர்வுத்தாள் குறியீடுகளையும் சம்பந்தப்பட்டோர் தேர்ந்தெடுக்க வேண்டும். இதன்படி உரிய தகவல்களை அறிந்து, வரும் ஏப்ரல் 19-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

DINAMALAR

PAGE NO: 15 DATE: 25.03.23

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை படிக்க விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, மார்ச் 25–** புதுச்சேரி பல்கலையில் முதுகலை பட்டம் மற்றும் பட்டைய படிப்புகளில் சேர்வதற்கு, தேசிய தேர்வு முகமை இணைய வழியாக விண்ணப்பிக்கலாம்.

பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ) நடத்தும் பல்கலைக்கழகப் பொது நுழைவுத் தேர்வு 'கியூட் (பி.ஜி) – 202'இன் படி, புதுச்சேரி மத்திய பல்கலையில் பல்வேறு படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம்.

முதுகலை பட்டப்படிப்பு, பட்டைய படிப்புகளுக்கு இணைய வழியில் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பத்தளம் கடந்த 20ம் தேதி முதல் திறக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் கியூட் (பி.ஜி.,) – 2023க்கு https://cuet.nta.nic.in என்னும் இணைய முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

https://www.pondiuni.edu.in/admissions என்னும் பல்கலைக்கழக வலை தளத்தில் தகவல் குறிப்பேட்டினை அறியலாம். விண்ணப்பங்களை வரும் ஏப்ரல் 19ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் விபரங்களை, https://cuet.nta.nic.in என்னும் என்.டி.ஏ., வின் வலைதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.